# ‘மறைந்தவர்களுக்கு ஈமச் சடங்குகளை முறையாக நிறைவேற்றுதல் முக்கியம்’

ப. பாலசுப்பிரமணியம்

தங்கள் அன்புக்குரியவர்களில் ஒருவர் இறக்கும்போது, அந்தத் துக்கத்திலிருந்து குடும்ப உறுப்பினர்கள் மீண்டு வருவதற்கு சற்று கால அவகாசம் எடுக்கும்.

ஆனால் துக்கத்தை அனுசரிக்கும் அதே வேளையில் இந்து சமயத்தின்படி, முறையான சாஸ்திர சம்பிரதாயங்களைப் பின்பற்றி உயிர் நீத்தவர்களை நல்ல விதமாக பூவுலகிலிருந்து அனுப்பி வைப்பது முக்கியம் என்கிறார் கேலாங் ஈஸ்ட் ஸ்ரீ சிவன் கோயிலின் அர்ச்சகர் குருப்ரகாஷ் சர்மா.



கேலாங் ஈஸ்ட் அவென்யூ 2ல் அமைந்துள்ள ஸ்ரீ சிவன் கோயில்.

படம்: த.கவி

கடந்த மூன்று ஆண்டுகளாக, இவர் சிங்கப்பூரில் ஈமச் சடங்குகளில் உதவும் அர்ச்சகராக இருந்து வருகிறார்.

ஐந்து பஞ்சபூதங்களை உள்ளடக்கிய உடலைவிட்டு உயிர் பிரியும்போது, அந்தப் பஞ்சபூதங்களுக்குச் செய்ய வேண்டிய மரியாதையைச் செய்து அவற்றை இறைவனிடம் சேர்ப்பிப்பது ஐதீகம்.

அந்த அடிப்படையில்தான் இறந்தவரின் நல்லுடலுக்குத் தண்ணீரைப் புனிதநீராகக் கருதி குளிப்பாட்டி, பின்னர் ஆடைகளாலும் மலர்களாலும் அலங்கரிக்க வேண்டும். நல்லுடல் அதன் பின்னர் தகனச் சாலையில் எரியூட்டப்படுகிறது அல்லது இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது. இது முதல் நாள் காரியம்.

“அதற்கு மறுநாள், எரியூட்டப்பட்ட நல்லுடலின் அஸ்தியை தகனச்சாலையில் குடும்ப உறுப்பினர்கள் பெற்றுக்கொள்ளச் செல்கின்றனர்.

“நல்லுடல் சாம்பலான பட்சத்தில், அந்தச் சூட்டினை தணிப்பதற்காக வெவ்வேறு சாம்பலாகாத உறுப்புகளைக் கொண்டு, சுத்தப்படுத்தி சிறப்பு வழிபாட்டுடன் பால், தயிர், தேன், நெய் போன்றவற்றுடன் அபிஷேகம் செய்தவுடன் அது கடல்நீரில் கரைக்கப்படுகின்றது. இது இரண்டாம் நாள் காரியம்.

“இதனைத் தொடர்ந்து 16வது நாள் காரியத்திற்காக குடும்பத்தினர் காத்திருப்பர். இதில் திருமணம் ஆகாமல் இறப்பவர்களுக்கு 11வது நாள் காரியமும் திருமணமாகி இறந்தவர்களுக்கு 16வது நாள் காரியமும் செய்யப்படுகிறது.

“மேலும், 15வது நாள் இரவு கண் விழித்து, முடிந்தால் நான்கு காலப் பூஜை செய்வது உத்தமம்.

“வீட்டில் பூஜைகள் செய்து பூமாலைகளால் அலங்கரித்து, பழங்கள், பலகாரங்கள் படைத்து நான்காம் காலம் முடியும்போது அந்தப் படையலை எடுத்துக் கொண்டு கடற்கரைக்குச் செல்ல வேண்டும்.

“அங்கு கடற்கரையில் இதர பூஜைகளுடன் ஆத்மசாந்தி ஹோமம் செய்து படையலைக் கடல் நீரில் சேர்க்க வேண்டும். பிறகு அந்தச் சடங்கை செய்தவர் முடி இறக்கியோ அல்லது சிறிய அளவில் முடிக்காணிக்கை செய்தோ அந்தத் தீட்டைக் கழிக்கிறார்.

“பிறகு வீட்டிற்கு ஒரு புண்ணிய தானப் பூஜை செய்துவிட்டு, சாமியறை உட்பட எல்லா அறைகளிலும் தண்ணீர் தெளித்து,இறந்தவருக்கு சைவ உணவைப் படையலாகப் போட வேண்டும்.

“அதே நாள் மாலை வேளையில் ஆலயத்தில் மோக்ஷ தீபம் பார்த்தல் என்ற வழிபாட்டில் அனைவரும் கலந்துகொள்வர்.

“அந்த தீபத்தைப் பார்த்த மறுநாள் வீட்டில் உள்ள சாமியறையில் விளக்கு ஏற்றலாம். அன்றிலிருந்து கோயிலுக்கு வழக்கம்போல் போகலாம்,” என்றார் அர்ச்சகர் குருப்ரகாஷ் சர்மா.

ஒருவர் இறந்ததிலிருந்து 16வது நாள் காரியம் வரை, ஈமச் சடங்கு செய்தவர்கள் கவனமாக இருக்க வேண்டும், கடல் தாண்டி போவதைத் தவிர்ப்பது நல்லது என்றார் ஸ்ரீ சிவன் கோயிலின் தலைமை அர்ச்சகர் சந்திர சேகர சதாசிவ சிவாச்சாரியார்.

வம்சம் தொடர்ந்து செழித்திருப்பதற்கும் ஆண்டுக்காண்டு இறந்தவருக்கு திதி பார்த்து திவசம் செய்வது அவசியமாகும் என்றார் அவர்.